

முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று (10.10.2025) ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு முத்துசாமி தனது முகாம் அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட முரசொலி செல்வத்தின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ், முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., மா.சு.ராதாகிருஷ்ணன், வீரமணி, ஆ. செந்தில்குமார், ப.க.பழனிச்சாமி, டி.எஸ்.குமாரசாமி, மாநகர செயலாளர் மு. சுப்ரமணியன், பகுதி கழக செயலாளர்கள் வில்லரசம்பட்டி ஏ. முருகேசன், அக்னி டி. சந்திரசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில்

# ‘கலைமாமணி விருதுகள்’ - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்!

## சென்னை கலைவாணர் அரங்கில் இன்று விழா!

சென்னை, அக்.10-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை 2021, 2022, 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் மற்றும் சிறப்பு விருதுகளையும் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது வழங்கும் விழா இன்று (11.10.2025 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகின்றது.

இவ்விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று விருதுகள் வழங்கி, மலர் வெளியிட்டு விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் 2021, 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதும், சிறப்பு விருதுகளாக பாரதியார் (இயல்) விருது முனைவர் ந.முருகேச பாண்டியன் அவர்களுக்கும், எம்.எஸ்.சுப்புலட்சுமி (இசை) விருது பத்ம விபூஷண் டாக்டர் கே.ஜே.யேசுதாஸ் அவர்களுக்கும், பால சரஸ்வதி (நாட்டியம்) விருது பத்மஸ்ரீ முத்து கண்ணம்மாள் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இவ்விழாவில் அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாலை 4 மணிக்கு “உருபாணர்” இசைக் குழுவினரின் யாழ் இசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

## திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் - பேரறிஞர் அண்ணா எழுதிய புத்தகங்கள் குறித்த திறனாய்வு கவிதைப் போட்டி!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் தலைமை!

திருவாரூர், அக். 11 –

முதலவர் மு.க. ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களது நல் வாழ்த்துக்களோடும், தலைமைக்கழக இலக்கிய அணி நிர்வாகிகளின் ஆலோசனைகளின்படியும், மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழிகாட்டுதல்களின்படி மாணவ – மாணவிகள் திராவிட இயக்கத்தின் தலைவர்களின் படைப்புகளை படித்து மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் மேலும் வளர்த்துக் கொண்டு, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்கிற திராவிடனாயகரின் முன்னெடுப்பை நிறைவேற்றிட, திருவாரூர் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் சார்பில் கொரடாச்சேரி வீ.ஆர்.என். திருமணத்தில் மண்டபத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவிகளுக்கான கவிதை எழுதும் போட்டி மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

இந்த போட்டியில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் எழுதிய புத்தகங்களில்லிருந்து தலா ஐந்து புத்தகங்களை படித்து, அதுகுறித்த திறனாய்வு கவிதைகள் எழுத மாணவர்கள் மாணவிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

மாவட்டம் முழுவதிலும் இருந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் இருந்து 100க்கும் மேற்பட்ட மாணவ – மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்றனர். போட்டிக்கு வந்திருந்த அனைவரையும் இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் புலவர் எண்கண் மணி வரவேற்றார்.

மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை, ஏற்று மாணவ மாணவிகளுக்கு கவிதை எழுதுவதற்கான உபகரணங்களை வழங்கி வாழ்த்தினார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் தலைமை கழக பேச்சாளர்கள் சோம.இளங்கோவன், தியாகராஜன் ,கவிஞர் உதயகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

போட்டியில் திருவாரூர் ஜி.ஆர்.எம் மேல்நிலைப்பள்ளி மாணவி ஸ்ரீப்ரியா முதலிடத்தையும் , விளக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி கனிமொழி இரண்டாமிடத்தையும் , திருத்துறைப்பூண்டி அந்தோணியர் மேல்நிலைப்பள்ளி மாணவி ப்ரியதர்ஷினி மூன்றாமிடத்தையும் பிடித்தனர். கொரடாச்சேரி மாதிரிப்பள்ளி மாணவர் சிறப்பு பரிசினை பெற்றார்.

கல்லூரி மாணவ – மாணவிகளில் சுவாமி தாயானந்தா கல்லூரி மாணவர் ஹாரிஸ் ஜெயராஜ் முதல் இடத்தையும், மத்திய பல்கலை கழக மாணவர் ரோஹித் இரண்டாம் இடத்தையும், திருத்துறைப்பூண்டி அரசுகல்லூரி மாணவி பிரியதர்ஷினி மூன்றாம் இடத்தையும் பிடித்தனர். பங்கேற்ற அனைவருக்கும் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் சார்பில் பாராட்டு சான்றிதழ் கள் வழங்கப்பட்டது. இந்த மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மாநில அளவிலான போட்டிக்கு அனுப்பப்படுவர் .

ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், கேப்டன் செல்வராஜ், பேரூர் செயலாளர் பூண்டி கே.கலைவேந்தன் மற்றும் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் ப.ஜாகிர் உசேன் , பாலமுத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாவட்ட துணை அமைப்பாளர் நல்லாசிரியர் செல்லத்துரைநன்றி கூறினார். விழாவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவியர்கள் பெற்றோர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர் .

## தளபதி முருகேசன் தலைமை! வே.மருதவேல் – தென்றல் மணிமாறன்

# பொள்ளாச்சி வடக்கு - கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி கூட்டம்!

## இளைஞரணி பார்த்தசாரதி – ஆஜிப்கான் சிறப்புரை!

*பொள்ளாச்சி, அக். 11 -*

*பொள்ளாச்சி வடக்கு கிழக்கு ஒன்றிய கிளை மற்றும் பாக இளைஞரணி நிர்வாகிகள் ஆய்வுக்கூட்டம் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் பொள்ளாச்சி வடக்கு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் வே.மருதவேல் ஏற்பாட்டில் கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் தென்றல் மணிமாறன் மேற்பார்வையில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பார்த்தசாரதி வரவேற்புரையில் நடைபெற்றது.*

*தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆஜிப்கான் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கி ஆய்வு மேற்கொண்டார். இதில் இளைஞர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

*உடன் தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெயக்குமார் , குச்சனூர் பிரசாத் , தேனி மாவட்ட ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் சீலையம்பட்டி நடராஜன், விஜயகுமார், கிருபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு நிர்வாகிகளை தனித்தனியாக ஆய்வு மேற்கொண்டனர் ,*

*நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் பணிக்கம்பட்டி முத்துசாமி, ஆட்சிபட்டி பாலகிருஷ்ணன், மெடிக்கல் பரமசிவம், மாவட்ட தொண்டரணி ஆட்சிபட்டி சுரேஷ், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் மோகன் வீரகுமார், மாவட்ட பிரதிநிதி நடராஜ் , ஒன்றிய பொருளாளர் நஞ்சப்பன் , சந்தேகவுண்டன்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தங்கராஜ்,*

*மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் சேரன்நகர் சுரேஷ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பூரண சந்திரன், கிளைக் கழக செயலாளர்கள், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆட்சிபட்டி கார்த்திக், கோகுல், சபரீஷ்வரன், மோகன் பிரபு, சேதுபதி, உதயகுமார், பொள்ளாச்சி நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சபரிமுத்துவீரன், நவீன்குமார் , முகேஷ் பாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*



ஆனைமலை பேரூராட்சியில் 07.10.2025 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மை பணியாளர்களுக்கு தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி நலவாரிய அடையாள அட்டைகளை வழங்கினார். அருகில் பேரூராட்சி தலைவர் திருமதி. கலைச்செல்வி சாந்தலிங்ககுமார், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய துணை தலைவர் திருமதி. செ.கனிமொழி, பேரூராட்சி துணை தலைவர் ஜாபர்அலி, பேரூராட்சி செயல் அலுவலர் அப்துல்லா ஆகியோர் உள்ளனர்.

# கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த குடும்பங்களுக்கு நிதி உதவி!

## தலைவர் – முதல்வரின் அறிவுறுத்தல்படி வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!



சென்ற மாதம் 27ஆம் தேதியன்று, கரூரில் எதிர்பாராத கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்தவர்களை, சந்தித்து நலம் விசாரித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண தொகையினை வழங்கி வருகிறார். நேற்று முன்தினம் 2 வது நாளாக காயமடைந்து சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பியவர்களின் வீடுகளுக்குச் சென்று வி.செந்தில் பாலாஜி, நிவாரண நிதியை வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், எம்.எல்.ஏக்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, கே.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், மாநகர செயலாளர் எஸ்பி.கனகராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் உடன் சென்றனர்.

## குறு–சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை – தமிழ்நாடு புத்தொழில் –

# புத்தாக்க இயக்கத்தின் சார்பில் - “உலக புத்தொழில் மாநாடு - 2025”

## முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**கோவை, அக்.11 –**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் (9.10.2025) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையைச் சார்ந்த தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக வளாகத்தில் “உலக புத்தொழில் மாநாடு 2025”–யைத் தொடங்கி வைத்து, தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை–2025 (Tamil Nadu Startup EcoSystem Report 2025) மற்றும் “Highlights of Startup Vision Report 2035 for Tamil Nadu” அறிக்கைகளை வெளியிட்டு, தமிழ்நாட்டு புத்தொழில் நிறுவனங்களுக்கு சலுகைத் தொகுப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்களுக்கு புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய அனுமதி ஆணைகளை வழங்கினார்.**

மேலும், முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் பிரான்ஸ், கனடா, ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### “உலக புத்தொழில் மாநாடு 2025” தொடங்கி வைத்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக வளாகத்தில், தமிழ்நாட்டின் புத்தொழில் சூழலை உலகத் தரத்தில் மேம்படுத்தும் முயற்சியாகவும், தமிழ்நாட்டின் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களுக்கு பன்னாட்டு இணைப்புகளை ஏற்படுத்தும் வகையிலும் 9.10.2025 மற்றும் 10.10.2025 ஆகிய இரண்டு நாட்கள் “உலக புத்தொழில் மாநாடு 2025” நடைபெறுகிறது.

### தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை மற்றும் Vision 2035 - வெளியிடுதல்

அதனைத் தொடர்ந்து, Inc42 நிறுவனம் தயாரித்த “தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை-2025” (Tamil Nadu Startup EcoSystem Report 2025) மற்றும் ஸ்டார்ட் அப் ஜீனோம் அமைப்பு தயாரித்துள்ள “Highlights of Startup Vision Report 2035 for Tamil Nadu” என்ற தொலைநோக்கு அறிக்கைகளின் முதல் நிலை செயல்திட்ட வரைவினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் வெளியிட்டார்.

### தமிழ்நாட்டு புத்தொழில் நிறுவனங்களுக்கு சலுகைத்தொகுப்பு வழங்குதல்

பெல்ஜியம் தூதர் திரு.டிடியர் வாண்டர்ஹாஸெல்ட் (Mr. Didier Vanderhasselt) அவர்களால் “Hub.Brussels – My Welcome Package Award” எனும் சலுகைத் தொகுப்பினை இரண்டு தமிழ்நாட்டு புத்தொழில் நிறுவனங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

### புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் நிதி வழங்குதல்

மாற்றுத்திறனாளிகளால் நிறுவப்பட்டுள்ள புத்தொழில் நிறுவனங்களான - 1) மனிதவள மேலாண்மைத் துறையில் இயங்கும் Warpe Academy Private Limited 2) மின்ணனுவியல் துறையில் இயங்கும் Ediode Electronics Private Limited 3) ஆடை விற்பனைத் துறையில் இயங்கும் Letsbuysarees நிறுவனம் மற்றும் 4) மதிப்புக் கூட்டப்பட்ட சிறுதானிய உணவுப்பொருட்கள் தயாரிக்கும் Humart நிறுவனம் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களால் நிறுவப்பட்டுள்ள புத்தொழில் நிறுவனங்களான - 1) நவீன திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கும் Evolvance 2) விவசாயத்துக்கு தேவையான தானியங்கி இயந்திரங்கள் சேவை அளிக்கும் சிவானி ட்ரோன் சர்வீசஸ் நிறுவனம் 3) ஆடை வடிவமைப்பு துறை சார்ந்த Kals Apparel 4) உணவு விற்பனை துறையில் இயங்கும் Princess of Trichy Refreshments நிறுவனம் ஆகிய எட்டு நிறுவனங்களுக்கு புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ், தலா 5 இலட்சம் ரூபாய், என மொத்தம் 40 இலட்சம் ரூபாய்க்கான முழு மானியத்துடன் கூடிய அனுமதி ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

### தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், உலகத்தரத்திலான தொழில் வளர்பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றிற்காக, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் பிரான்சு நாட்டின் Link Innovations, பிலிப்பைன்ஸ் நாட்டின் Techshake, ஜெர்மனி நாட்டின் Asia Berlin உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### புத்தொழில் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகள்

இம்மாநாட்டில், தமிழ்நாட்டைச் சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள், நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்யும் (D2C) பெண் தொழில்முனைவோர்களின் புத்தொழில் நிறுவனங்கள், மாணவர்களின் புத்தாக்க முயற்சிகள், விண்வெளி தொழில்நுட்பத் துறை புத்தொழில் நிறுவனங்கள், மேம்பட்ட உற்பத்தி துறை சார்ந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் என பல்வேறு நிறுவனங்களால் அமைக்கப்பட்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார். மேலும், தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்களுக்கு பன்னாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 21 நாடுகள் பங்கேற்ற பன்னாட்டு அரங்குகளும் இதில் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாநாட்டில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, உகாண்டா நாட்டின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க துறை அமைச்சர் திருமதி மோனிகா முசெனெரோ மசன்சா, சுவிஸ் நாடாளுமன்றத்தின் உறுப்பினர் டாக்டர் நிக்கலஸ் சாமுவேல்குகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, துபாய் சிலிகான் ஓயாசிஸ் மூத்த துணைத் தலைவர் கானிம் அல்-பலாசி, ஒன்றிய அரசின் மின்துறை, தகவல் தொழில்நுட்பத் துறை செயலாளர் கிருஷ்ணன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், கோயமுத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், ஆசியா பெர்லின் தலைமை நிர்வாக அலுவலர் மார்டன் ராசன்பெர்க், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் நிருவாக இயக்குநர் மற்றும் தலைமை நிருவாக அலுவலர் சிவராஜா ராமநாதன், தமிழ்நாடு FICCI அமைப்பு தலைவர் டாக்டர் ஜி.எஸ்.கே. வேலு, ஏ.பி.டி. இன்டஸ்ட்ரீஸ் செயல் இயக்குநர் சங்கர் வானவராயர், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரசுப் பிரதிநிதிகள், முன்னணி புத்தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள், புத்தொழில் சூழமைவு செயல்பாட்டாளர்கள், தொழில்முனைவோர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.